மட்டக்களப்பு

# வரலாற்று அம்மானை




இயற்றியவர்:—

மா. சிதம்பரப்பிள்ளை

கன்னன்குடா.


1979.


ராஜன் அச்சகம், மட்டக்களப்பு.

மட்டக்களப்பு மாவட்ட சனசமூக நிலைய அதிகாரியும்
நவகிரிநகர் கிராமாட்சி மன்ற
விசேட ஆணையாளருமாகிய
**திரு. ம. சற்குணம் எம். ஏ. அவர்கள்**
வழங்கிய

# மதிப்புரை.

---

எதுகை மோனை முதலாக ஒன்றும் வந்து பொருந்தாமல் இயற்றும் பாடல்களைச் செந்தொடை என்று யாப்பிலக்கண நூல்கள் கூறும். இந்த வரையறையை அறியாதார் தாம் இயற்றும் செய்யுள்களுக்குப் 'புதுக்கவிதை' என்று நாமஞ் சூட்டியுள்ள இந்நாளிலே பள்ளிக்கூடஞ் சென்று அதிகம் படித்தறியாத பாவலனுற் பாடப்பட்டதே 'மட்டக்களப்பு வரலாற்று அம்மானை' என்னும் இந்நூலாகும்.

இந்நூலுக்குப் பொருள், மட்டக்களப்பு மாநிலமெங்கணும் ஏட்டுப் பிரதிகளில் வழங்கி வரும் 'மட்டக்களப்பின் பூர்வீக சரித்திரத்தில்' அடங்கியுள்ளது. இதுவே வித்துவான் எவ். எக்ஸ். சி. நடராசா அவர்களால் 'மட்டக்களப்பு மான்மியம்' எனப்பதிப்பித்து (1962) வெளியிடப்பட்டு இலங்கை சாகித்திய மண்டலப்பரிசைப்பெற்றது. ஆடக சவுந்தரி குளக்கோட்டன் பற்றி இவ்வம்மானையில் வரும் வரலாற்றுப் பின்னணி கவிராஜர் அருளிச் செய்த "கோணேசர் கல்வெட்டென வழங்கும் கோணேசசாசனத்திலும் உண்டு. இது பு. பொ. வைத்திலிங்கதேசிகரால் (1916) பதிப்பிக்கப்பட்டு 'ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணத்தோடு' ஒரு பகுதியாக வெளிடப்பட்டுள்ளது. இதனைச் சைமன் காசிச் செட்டி (1831) ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.

எனவே, பழைய ஏட்டுப்பிரதிகளிலும் நூல்களிலும் உள்ள மட்டக்களப்பின் பூர்வீக வரலாற்றை அம்மானையிலே பாடிப்பாமர மக்களும் அறியச் செய்யக் கன்னன்குடாவைச் சேர்ந்த மா. சிதம்பரப்பிள்ளை எடுத்துக்கொண்ட முயற்சி பாராட்டத்தக்கது. இவர் அம்மானையிற் பாடி வெளியிட்ட நூல்கள் பலவாகும். மாமாங்கத்து அம்மானை, தாந்தாமலை அம்மானை' மட்டக்களப்பிற் குடியேறிய முற்குலத்தவரின் கல்வெட்டு அம்மானை, கலிகாலத்து அம்மானை, திருக்கேதீஸ்வரத்து அம்மானை எனப்பல அம்மானைப் பாடல்களைப்பாடி வெளியிட்டுள்ளார். அத்தோடு மாமாங்கப்பிள்ளையார் பேரில் கும்மிப்பாட்டு, மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் பேரில் தோத்திரப்பற்று, தாந்தாமலைக் காவியம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீசுபரன் பேரில் தோத்திரப்பற்று, பண்டாரியாவெளி நாகதம்பிரான் காவியம் சனீஸ்வரர் தோத்திரம், புயல்க்காவியம் முதலான நூல்களையும் பாடி வெளியிட்டுள்ளார். இந்த 'மட்டக்களப்பு வரலாற்று அம்மானை' இவரது பதின்மூன்றுவது வெளியீடாகும்.

இவ்வாசிரியராற் பாடி மேடையேறிய வடமோடி, தென்மோடிக் கூத்து நாடகங்களும் பல சத்தியசீலன் நாடகம், கடோா்கஜன் நாடகம், நல்ல தங்காள் நாடகம், கலிகாலன் நாடகம், கெங்கையம்மாள் நாடகம் முதலான வடமோடி நாடகங்களும், லீலாவதி நாடகம் யயாதி ராசன் நாடகம், தழுக்குச் சுந்தரி நாடகம், புவனேந்திரன் நாடகம், சித்திர புத்திரர் நாடகம் முதலிய தென்மோடி நாடகங்களும் மட்டக் களப்பின் பல பாகங்களிலும் மேடையேற்றப்பெற்றுப் பல சிறப்பு விருதுகளை நாடகாசிரியருக்குத் தேடிக்கொடுத்தன.

இவராற் பாடப் பெற்று இன்னும் வெளிவராமல் இருக்கும் மாரி அம்மன் கும்மி. காளியம்மன் கும்மி, கண்ணகை அம்மன் கும்மி, சுடலை வைரவர் காவியம், தான்தோன்றியீசுபரர் பதிகம், முதலானவை அச்சு வாகனமேறி வெளிவருதல் வேண்டும். தானே பாடித் தனது சொந்த முயற்சியினாலே பதின் மூன்று செய்யுள் நூல்களை வெளியிட்ட இவரின் ஆக்கங்களை மட்டக்களப்பின் தமிழ் வளர்ச்சிக் கழகங்கள் பொறுப்பேற்று வெளியிட்டு வைப்பதைத் தமிழுலகம் பெரிதும் விரும்பும்.

மட்டக்களப்பு வரலாறுபற்றி அறிந்துகொள்ள ஒருசில நூல்களே கிடைக்கும் இந்நாளில் "மட்டக்களப்பு வரலாற்று அம்மானை"யை இலகு தமிழிற் பாடி வெளியிட்டு வைக்கும்சிதம்பரப்பிள்ளை புலவரை மட்டக்களப்பு வரலாறு எழுதுவோர் மிகவும் எளிதில் மறந்துவிடமாட்டார்கள் என்று நம்புகிறேன். இறவாத புகழுடைய தமிழ் நூல்கள் புதிதாக இன்னும் வெளிவருதல் வேண்டும். புலவரது தமிழ்ப்பணி இந்த வகையிலே தொடர்ந்து செல்ல எல்லாம் வல்ல இறைவனை ஆசிக்கிறேன்.

ம. சற்குணம்

# விநாயகர் காப்பு.

## வெண்பா.

மட்டக் களப்புநகர் மகிமைஅம் மானையதாய்
இட்டமுடன் செந்தமிழால் இயற்றவே-துட்டர்களைக்
கருவறுக்கும் ஆனைமுகா கல்லவாணித் தாயாரே
வருவீர்என் சிந்தையிலே வாக்கருள்வீர்.

## அம்மானை.

அருமறைக்கும் மேலான ஆதிசிவன் மகனே
கருமுகிலசேர் நாரணனின் மருகா கயமுகனே
வருவாய்என் சிந்தையிலே வந்திருந்து உன்னருளைத்
தருவாய்விநாயகரே தாளிணைகள் தஞ்சமையா

தஞ்சமெனப் பணிந்தேன் தாயே சரஸ்பதியே
அஞ்சாமல் நான் பாட அழகுதமிழ் தாரும்அம்மா
தாரணியி லேயழகு தமிழறிந்த பண்டிதரே
பாரத நாடுவிட்டுப் பரிவாய் இலங்கையிலே

இலங்கை நகர் கலிங்கராச னவர்வந் ததுவும்
தலங்கள் பலவாகத் தானமைத்த காரணமும்
நலங்கொள் பலஅரசர் நாடாண்ட செய்திகளும்
குலமுறையுங் கோத்திரமுங் குறிந்துவைத் தாரன்னாளில்

அன்னாளிலே யிருந்த அரசர் அறிஞர்களும்
மன்னர் குலமுறையும் மற்றும்பல செய்திகளும்
வன்னமுள்ள ஏட்டில் வரைந்தார்கல் வெட்டிலென்று
இன்னாள் அதனையும்நான் இயன்றபடி யாக

படிபுகழ அம்மானை யாகநான் பாடுகின்றேன்
அடியேனின் பாடலிலே அரும்பிழைகள் வந்தாலும்
கடியகுறை களென்று கருதாதீர் கற்றவரே
கொடிய வினையகலக் குருபரனைப் போற்றிசெய்து

போற்றியே அம்மானை புகலுகிறேன் கேளுமினி
நாற்றிசையும் பேர்விளங்கும் நலலவரகடையின்
வேற்றரசர் தாழ்பணிய வேந்தன் கலிங்கனுமே
ஏற்றபுகழ் பெருக எல்லைஎங்கும் ஆண்டிருந்தார்

எல்லைஎங்கும் ஆண்டுஇவர் இருக்கும் நாளையிலே
சொல்லரிய மாநாகர் மகளான கண்ணகிக்கு
நல்லசிலம் பதற்கு நாகமணி தானெடுக்க
வல்லபுகழ் மீகாமன் வருகின்ற வழிதனிலே

வழிமறித்து மேகலிங்க ராசனிட ஏவலர்கள்
அழிமதிகள் செய்தவிதம் அறிந்தல்லோ கண்ணகியாள்
கண்ணகியாள் சினந்து கடியசாபம் இட்டதினால்
மண்ணை யரசாண்டிருந்த மன்னன் கலிங்கனுமே

விண்ணவரும் புகழும் வீரன்படை யாட்சியொடு
நன்னயஞ்சேர் ஓடமதில் ஏறிச்சில பேருடனே
பேரான நாடுவிட்டு வாழூர் கடல் வழியே
சீராக இன்னமொரு செய்திநான் சொல்லுகிறேன்

நேராய் இலங்கையிலே நெடியகடல் தான்வளைந்த
பாரெங்கு மேபுகழும் பாங்கான கீழ்த்திசையில்
கீழ்த்திசையி லேதிமிலை தீவென்னும் மாநகரில்
ஆத்தருகிலே திமிலர் அன்பாகவாழ்ந் திருந்தார்

நேர்த்தியாய் அவ்வூர்க்கு நேரானதென் திசையில்
சாற்றுவேன் மணற்காட்டு வேடர்கள்தான் சிலபேர்
மணற்காட்டு வேடுவர்கள் மகிழ்வாக வாழ்ந்திருந்தார்
இணக்கமுட னவர்க்கு இயல்வாய்ச் சரக்குவகை

சரக்குவகை பலவுந் தானேதுலுக் கர்களும்
மரக்கலத்தில் ஏற்றிவந்து மணற்காட்டு வேடுவர்க்குக்
கொடுத்தே திமிலருக்கும் கொள்வனவு தானேற்றி
எடுத்தே திரும்பியவர் ஏகிவருகை யிலே

வரும்போதி லேகடலில் வந்தகலிங்க மன்னன்
விரும்பியே பட்டாணி மாரைஅரு கழைத்து
எங்கிருந்து வாறீர்கள் என்றரசன் கேட்டிடவே
மங்களமாய்த் துலுக்கர் மன்னனிடம் உரைப்பார்

அங்கே ஒருதிடலில் ஆன திமிலர்களும்
தங்கி மணற்காட்டு வேடுவரும் வாழுகின்றார்
நாங்கள் அவர்களுக்கு நலமுடனே சாமான்கள்
பாங்காய்க் கொடுத்துஅவர் கொடுத்த தொருளதனை

வாங்கியே தான்போறோம் வகைவிபரந் தான்கேட்ட
நீங்கள் யாரென்று நிகழ்த்துவீர் எங்களுக்கு
என்றல்லோ பட்டாணிமார்கள் இவை உரைக்க
நன்றாகவே கலிங்க ராசனுமே தானுரைப்பான்

கேளுங்கள் பட்டாணி மார்களே என்நகரம்
நாளும் வளங்கொழிக்கும் நல்லகலிங்க நகர்
நகரமதை விட்டுஅல்லோ நாங்களொரு காரியமாய்
திகழும் கடல்வழியே திரிந்தலைந்து தான்வாறோம்

வாருங்கள் நீங்களுந்தான் உரைத்த இடந்தனுக்கு
சேருவோம் அங்கிருக்கும் செய்திதனை அறிந்து
அறிந்து வருவோமென் றவர்களையுமே திருப்பி
செறிந்த கடல்வழியே சென்றார் வெகுதூரம்

சென்றார் வெகுதூரம் தென்திசையின் ஓரமதாய்
நன்றாகவோர் கால்வாய் நாடியே ஓடிவர
கண்டார் கலிங்கமன்னன் கடல்வழியே ஓடமதைக்
கொண்டுசென்றார் தூரமதைக் கண்டுவர வேணுமென்று

வேணுமென்று ஓடமதை வேந்தர்விட்டுப் போகையிலே
காணுங்கரை யதற்குமேலே களப்பாகத் தானே
தெரிகிறதைத் தார்வேந்தன் கண்டுமப்போ
நானே இதற்கு நவிலுவேன் பேரென்று

மட்டுக்குமட்டாஅப்பாலேதான்களப்பு
மட்டக்களப்பு என்று மன்னன்கலிங்க னவர்
இட்டமுடன் பெயரோ இதற்கிட்டார் அன்னாளில்
திட்டமிட்டுத் தானவர்கள் திரும்பிவந்து மண்முனையில்

மண்மேடதில்உயரமாய்இருந்தகாரணத்தால்
மண்முனை என்றுபெயர் வைத்தல்லோ மன்னவர்கள்
நன்னயமாய் அவ்விடத்தில் நாடியே கூடாரமிட்டுத்
திண்ணமுடன் இருக்கத் திமிலர் இதைஅறிந்து

அறிந்தே திமிலர்களும் அதட்ட இவர்களையே
செறிந்தே திமிலர்களைத் துரத்தவே வேணுமென்று
துரத்தவே பட்டாணி மாரைத் துணையாக
வரச்சேர்த்துமேதிமிலர்வாழ்ந்தநகர்தனிலே

சென்று புகுந்துமங்கே திமிலர்களைத் தான்மடித்து
அன்றுசமர்க் காற்றாமல் அலறியே சென்றவரைக்
கொன்று வெருகலுக்கு அப்பாலே தான்விடுத்து
நன்றாக அங்கொருகல் நாட்டிக் கலிங்கமன்னன்

வென்று திமிலர்களை மீண்டுவரு கையிலே
கண்டார்கள் பத்திஎன்னும் கன்னிதனை இவர்கள்
பத்திதன்னை வெட்டியங்கோர் பாலைமரந் தனிலே
செத்திடவே தூக்கியவர் திரும்பி வருகையிலே

எத்திசையு மேயிருந்து ஏகிவந்த பேர்களெல்லாம்
சுத்திவந்து ஓரிடத்தில் சூழ்ந்தார்கள் எல்லோரும்
வந்துஇரு படையும் சந்தித்தகா ரணத்தால்
சந்தித்த காரணத்தால் சந்திவெளி என்றுசொல்லி

அந்தஇடந் தனக்கு அன்புடனே பேருமிட்டு
விந்தையுடன் திரும்பி விரைந்துவந்து ஓரிடத்தில்
வந்துகளை யாறியதால் வந்தாறுமூலை என்று
என்றுஅதற் கிணங்க ஏற்றபேர் தான்கொடுத்து

நன்றாக வேதிரும்பி நாடிவரு கையிலே
சத்துருவைக் கொண்டஇடம் சத்துருக்கொண் டானெனவே
சித்தம் மகிழ்வாகச் சிறந்தபேர் தான்கொடுத்து
மெத்த விரைவாக மேவித் திமிலைநகர்

செத்த திமிலர்களின் தேவிமார் மக்களேயே
பட்டாணி மார்களுக்குப் பரிவாய் மணம் முடித்து
இட்டமுட னவர்க்கு இருக்கஇடமுங் கொடுத்து
சட்டமுடன் முன்குடியூர் ஏருவூர் என்றுரைத்து

மட்டக் களப்பதிலே மகிழ்வாக வாழுமென்று
இட்டமிட்டு மேகலிங்க ராசனுமே யப்போது
கட்டழகு மன்னன் கலிங்க மகாராசன்
மன்னவனும் மண்முனையில் மகிழ்ந்து குடியேறி

இன்னமுந்தன் சேனைகளை இங்கே வரவழைத்து
சென்னெல் பயிரிடுகை செய்தொழிலுந் தான்பிரித்து
வன்னமுடன் ஏழுகுடி யாகவே வகுத்து
ஏழுகுடி யார்க்கும் ஏவலது செய்திடவே

ஆளும் வகுத்துவைத்து அவர்க்கும் வரிசையது
நாளுந் தவறுதபடி நடக்கவே தான்வகுத்து
வாழுகின்றார் மண்முனையில் வளமைகளைக் கேளுமினி

## விருத்தம்

மட்டுமா நகரிலேதான் மண்முனையென்னுமூரிற்
கட்டழ குடையமன்னன் கலிங்கனும் இருக்கும்செய்தி
திட்டமாய்க் கண்டியாண்ட தீரனும் ராசசிங்கம்
சட்டென அறிந்தப்போதே தளபதிக் குரைசெய்வானே:

## அம்மானை

அன்னாளில் கண்டிநக ராண்டிருந்த ர்ராசசிங்கன்
வன்னமுடனே கலிங்கன் வந்தவிதம் தானறிந்து
என்னுடைய மந்திரியே ஏற்றதள பதியே
மன்னவர்கள் ஆரோநம் மாநகரில் வந்தாராம்

இன்நகரிலே யவர்கள் ஏகிவரக் காரியமேன்
பின்னப்பட அவரைப் பிடித்து விலங்கிடுவோம்
என்றுசொல்லி ராசசிங்கன் எழுந்து படைகளுடன்
நன்றாகத் தான்வரவே கண்டு கலிங்கமன்னன்

சென்றுராச சிங்கனுடன் சினேகிதங்கள் கொண்டாடி
அன்று இலங்கைதன்னை ஆறிரெண்டாய்த் தான்பிரித்து
நுகரையொடு கன்னி நுவரெலியா மாத்தறையும்
அகமகிழ வேதான் அனுராசபுர மதுவும்

காலியொடு வதுளை விந்தனையாம் இந்தளட்டும்
நாலிரெண்டு பங்கதனைத் தானெடுத்து ராசசிங்கன்
மட்டக் களப்பதனை மன்னன் படையாட்சி
இட்டமுட னுழ இவருக்கிதைக் கொடுத்து

திருகோணை மாமலையைத் திமிலருக்குத் தான்கொடுத்து
குருகுல வம்மிஷக் குலத்தினர் தங்களுக்கு
மன்னுரும் யாழ்ப்பாணம் மகிழ்ந்தே அவர்க்களித்து
அன்னைசுந்றம் போலே அனைபேரும் வாழ்ந்திருந்தார்,

## விருத்தம்

வாழ்ந்திருக்கப் படையாட்சி மன்னன்
தனையே வன்னிமையாய் ஆழ்ந்த கடல்
சூழ்மட்டுநகர் அதனை ஆழ அங்கிருத்தி
சூழ்ந்தேகுடிகள் வரல்முறையாய்த் தொழில்கள் செய்து

வாழ்ந்து வர
வேந்தன் கலிங்கன் தன்நகரம் மேவி
இருந்தான் சிலநாளில்;

## அம்மானை

கலியுகாதி வருஷக் கணக்கின் படியாக
வலியபுகழ் முற்குலத்தோர் வந்திடும்நாள் கேளுமினி
இரண்டாயிரத்தி எண்ணூறும் ஆண்டதிலே
தாணிபுகழ் மட்டக்களப்ப தெனறுபேர் சிறந்து

சிறந்தே இலங்கைகளங்கும் சிலமன்னர் ஆண்டபின்பு
திறமுடைய மன்னன் திரண் கயபாகு
புவனைய கயபாகு புகழாய் இலங்கையிலே
பயம் எதிரிஇல்லாமல் பாருலகை ஆழ்கையிலே

ஆழக் கடல்தனிலே அதிசயமாய் ஓர்பேழை
தாழாமலே மிதந்து தான்கரையில் வந்ததென்று
வந்தங்கே பாருமென்று மன்னனிடம் மந்திரிமார்
விந்தையுடன் உரைக்க விரைந்து மன்னன் அங்குசென்று

அந்தரங்க மாகவந்த அழகான பெட்டகத்தைச்
சிந்தை துணிவாகத் திறந்தரசன் பார்க்கையிலே
பார்க்கஅங்கோர் பெண்குழந்தை பரிவாய்ச் சிரித்திடவே
சேர்த்தெடுத்து மன்னன் திருமார்பிலே அணைத்துப்

பாலகி சிரித்தமையாற் பாலநகை என்று சொல்லிக்
கோலமுடன் அப்பெயரும் குறித்தே: குழந்தைதன்னை
ஆவலுடன் கொண்டுசென்று அன்புடனே தான்வளர்த்து
நாவர்கள் தான் புகழ நல்லமகள் தனக்கு

ஆடக சவுந்தரி என் றழகான பேருமிட்டு
மாடமதிலே வளர்த்து மகள்பருவ மானபின்பு
நாடதனை ஆளுதற்கு நன்றாய் முடிதரித்து
வாடாமலே இருந்து வையகத்தை ஆளுமென்று

வையகத்தை விட்டுமன்னன் வானுலகம் போனபின்பு
ஐயமறத் தானிருந்து அரசுபுரி நாளையிலே
தையலரும் ஓர்இரவு தான்கனவு கண்டுமல்லோ
மெய்யோ இதைஅறிவோம் என்றல்லோ மெல்லியரும்

என்றல்லோ தான்கனவு கண்டமலை யருகே
சென்று சிறிராமர் மந்திரத்தைச் சொல்லிடவும்
நன்றாக நூற்றெட்டுப் பூதமது அங்கிருந்து
ஒன்றாக வந்துபணிந் தேவலது தான்கேட்க

ஏவலது புரிந்து ஏந்திழையாள் பூதமதைக்
காவலுட னேதான் கட்டழகி வைத்திருக்க
நாவலர்கள் தான்புகழும் நல்லமகாசேனன்
ஆவலுடன் இலங்கை வந்தகதை கேளுமினி.

## விருத்தம்

ஆடகசவுந்தரி யாள்தானும் அழகுறும்
இலங்கைதன்னில் பாடகர்புகழச்
செங்கோல் பரிவுடன் ஆளும் நாளில்
பாரத நாடுவிட்டுப் பரிவுடன் மகாசேன

மன்னன் சீருடன் இலங்கைவந்த
செய்தியை உரைசெய்வேனே.

## அம்மானை

கங்கையொடு யமுனை காவேரிதான் பரந்து
எங்கும் புகழ்பெருகி இருக்கும் இந்தியாவினிலே
பங்கமறப் பருதி குலமதனி லேபிறந்தோன்
மங்கையர்கள் கண்டு மயங்கும் வடிவுடையோன்

வடிவுடைய மன்னன் மகாசேன ராசனுமே
படிபுகழும் நாடுவிட்டுப் பாரக்கடல் கடந்து
தென்கயிலாய மென்னுந் திருகோண மாமலையில்
அன்புடனே வந்திறங்கி அரனார் அடிவணங்கி

இன்பமுடனே குளங்கள் இலங்கையிலே கட்டுதற்கு
மன்னன் மகாசேனன் மகிழ்ந்து துவங்கையிலே
அன்னாள் அரசாண்டிருந்த ஆடக சவுந்தரியாள்
மின்னாள் அதைஅறிந்து மிகுவிரைவில் மந்திரிமார்

தன்னைஅனுப்பி இங்கே தான்வேறு மன்னவர்கள்
என்னவித வேலைகளும் எவரும்செய்ய லாகாது
ஆகாது நாடுவிட்டு அப்பாலே செல்லுமென்று
வாகான மந்திரிமார் தன்னைவர விடவே

மந்திரிமார் வந்து மகாசேனனைப் பார்த்து
சுந்தரமும் நற்குணமும் சொல்லுகின்ற பேச்சழகும்
அந்தமன்னன் தன்னுடைய ஆதிவரல் வாறுகளும்
சிந்தை மகிழ்வாகத் தெரிந்தல்லோ மந்திரிமார்

இந்தமன்னன் நம்மரசிக் கேற்றமணை வாளனென்று
விந்தையுடன் திரும்பி விரைந்துவந்து மந்திரிமார்
சந்தோஷமாய் அரசிதனைப் பார்த்ததுமே உரைப்பார்
வந்தமன்னன் தன்னுடைய வழுமைகளும் நற்குணம்போல்

எந்த இடந் தனிலும் எவரையும்நாம் கண்டதில்லை
செந்தேன் மொழியாரே தெள்ளமுதே நீயவரைக்
கலியாணந் தான்முடித்துக் களிப்புடனே வாழுமென்று
சலியாமல் நீருமங்கே தான்வந்து பாருமென்று

ஆடக சவுந்தரியை அன்புடனே தானழைத்து
ஓடமதில் ஏற்றியேதான் ஓடிக் கடல்வழியே
வந்துதிருக் கோண மலையிலே தான்இறங்கி
அந்தஇடம் அமர்ந்த ஆதிசிவனைப் பணிந்து

விந்தையுடன் அங்குவந்த வீரன்மகா சேனனையே
இந்தமங்கை கண்டுமணஞ் செய்யவேதான் இசைய
மன்னனிடம் மந்திரிமார் மணவிருப்பந்தான் கேட்க
தன்னுடைய எண்ணமதை தானேஉரைக்க லுற்றான்

என்னுடைய வேலையது இந்தஇலங் கையிலே
வன்னமுடனே குளங்கள் வாகான ஆலயங்கள்
கட்டிமுடிந்த பின்பு கலியாணம் செய்வதென்று
திட்டமுடன் என்மனதைத் தெரிவித்தேன் உங்களுக்கு

என்றுமகா சேனன் எடுத்துரைக்க அப்போது
அன்று மகிழ்ந்துமனம் ஆடகசவுந்தரி யாள்
என்னிடத்திலே இருக்கும் ஏற்றவழு பூதமதால்
உன்னுடைய வேலைகளை உத்தமரே நீமுடியும்

மன்னவரே பின்னாலே மணஞ்செய்வோம் என்றுசொல்லி
அன்னவளுந் தன்னுடைய அரசியிலே போயிருந்தாள்
போயிருந்து பூதமதைப பொற்கொடியாள் தான் அனுப்ப
பேயுருவம் போலேபெரும் பூதம் அத்தனையும்

வந்துமகா சேனன் வார்த்தையது போலே
சுந்தளாய் மின்னேரிக்குளம் கட்டியே முடித்து
சிந்தை மகிழ்வாகத் திருக்கோண மாமலையில்
அந்தஇடங் கோணேசர் ஆலயமுங் கட்டுவித்து

உன்னரசி கிரியதனை உகப்புடனே ஆண்டிருந்த
அன்னையராம் அந்த ஆடக சவுந்தரியை
நூற்றிப் பதினேழு வயதுடைய மங்கையரை
வேற்றுமைகள் இல்லாமல் வேந்தன் மணம் முடித்து

நாற்றிசையுங் கொண்டாட நல்லகுளக் கோட்டன் என்று
சாற்றவே எல்லோருந் தானரசி ஆண்டிருக்க
சிங்ககுமாரன் என்று சிறுவனுமே தான்பிறந்து
மங்களமாய் மூன்று வயதானதின் பிறகு

அங்கவளாம் அந்த ஆடக சவுந்தரிக்கு
தங்கையர்க்கு நூற்றி இருபதாம் வயதினிலே
வயதுநூற் றிருபதிலே வானுலகம் போய்ச்சேர
தயவாகவே குழந்தைதனை வளர்த்து மன்னவனும்

மன்னவனுந் தன்னரசை மைந்தனிடமே கொடுத்து
அன்னைஉமை யோடரனும் அன்பாகவே அமர்ந்த
தென்கயி லாயமென்னும் திருக்கோண மாமலையில்
பொன்கயிலை மாமலையிற் போய்ப்புகுந் தாரம்மானை.

## விருத்தம்

மன்னவன் மகாசேனராசன் மகிழ்வுடன் இலங்கையாண்டு
அன்னவன் கயிலைநாதன் அடியிணை அமர்ந்தபின்பு
வன்னமதாக மட்டக்களப்பிலே சிங்க குமாரன்
பொன்முடி தரித்து ஆண்டகதை யதைப் புகலுவேனே

# அம்மானை

மூவாயிரத்தி முன்னூற் றெழு பதிலே
ஏவலர்கள் போற்றிசெய்ய எங்குந்தன் பேர்விளங்க
சிங்கரு மாரனுமே சிறந்துமட்டு மாநகரில்
அங்கவனும் உன்னரசி கிரியதனி லேயிருந்து

பங்கம்ஒன்றும் இல்லாமல் பாருலகை ஆழ்கையிலே
மங்களமாய் உகந்தை மலையிலே ஆலயங்கள்
விந்தையுடன் மூன்று ஆலயங்கள் தானமைத்து
சிந்தை மகிழ்வாகச் சிறந்த மலையருகே

அட்ட பாலகருக்கு ஆலயங்கள் தானமைத்து
கட்டளையாய் மன்னன் அறுகாலபூசை தான்நடத்த
திட்டமிட்டு மன்னவனும் சிறந்துஅந்த எல்லையிலே
வெட்டியந்தக் காட்டைஎல்லாம் வெளியாக்கி அப்போதே

வெளியாக்கி ஆயிரம் அவணநெல்தான் விதைக்கும்
களிசேர்ந்த வட்டையது காவலனும் உண்டுபண்ணி
உண்டுபண்ணி ஐநூறு அவணம் விதைநிலத்தை
நன்றாகவே யந்த ஆலயத்திற்கே கொடுத்து

அன்று குமுக்கன்என்னும் ஆறிலிருந்து நீரெடுத்து
மண்டு முறையாகப் பலநாளுமே நடக்க
சீராகவே நடக்கச் செழித்துலகை ஆழ்நாளில்
தாரக சோதிஎன்னுந் தையலரும் அப்போது

மாரனைப் போலேஒரு மைந்தனையே பெற்றெடுத்தாள்
ஆரும் புகழ்ந்தேற்ற அன்பான மைந்தனுக்கு
சிறிசிங்கன் என்றுமல்லோ சீரான பேருமிட்டு
அறியச் சகலருமே அவன்பருவ மானபின்பு

மட்டக்களப் பாழ மகிழ்வாய் முடிசூட்டி
திட்டமுட னவனும் சிலகால மானபின்பு
சிலகால மானபின்பு தினகர சேனனுமே
நலமாக வேஇந்த நாடதனை ஆண்டிருந்து

உலகமதை விட்டவனும் உம்பர்பதி சென்றபின்பு
பலரும புகழ்ந்தேற்றப் பரிவாய் முடிசூட்டி
சங்கன்எனும் அரசன் தானே கலிபிறந்து
மூவா யிரத்தி நானூற்றி இருபதிலே

பாவாணர் தான்புகழப் பாருலகை ஆண்டிருந்தான்
ஆண்டுசில காலம் அவனும் மடிந்தபின்பு
நீண்ட புகழுடையோன் நிகரில்லாப் பானுஎன்னும்
பானுஎன்னும் அரசன் பரிவாய் முடிசூட்டித்

தானும் அரசுசெய்து வானுலகம் சேர்ந்தபின்பு
பின்பு இங்கே தான் அமர சேனன்எனும் அரசன்
அன்பாய் மட்டக்களப்பை அவனுஞ்சில நாளாண்டு
இன்பமுடன் இருந்து இவனும் மடிந்தபின்பு

நன்பாய்க் கலிபிறந்து நாடி மூவாயிரத்தி
ஐநூறும் வருஷமதில் ஆனதுண சிங்கனுமே
வையகத்தை ஆண்டுஅவன் வாகாய் இருக்கையிலே
தையலராம் உலக நாச்சியவள் இலங்கை

யையமலந்து சேர்ந்தகதை பகருகிறேன் கேளுமினி

## விருத்தம்

மன்னவர்புகழும் மட்டக் களப்பிலே குணசிங்கன் தான்
அன்னவன் இருந்து செங்கோல் அரசது புரியும்நாளில்
வன்னமாய்க் குகசேனன் தன்மகள்எனும் உலகநாச்சி
இன்னகர் இலங்கைவந்த கதைஇனிச் சொல்லுவேனே

## அம்மானை

கலிங்கநகர் ஒரிசா தேசமதை ஆண்டிருந்த
வலிகொள் குகசேனன் மகள்உலக நாச்சிஎன்பாள்
சலியாமல் புத்தரிட தசனமதைத் தானெடுத்து
நலியாமல் தன்னுடைய கூந்தலுக்குள் நங்கையரும்

வைத்துஅதை ஒருவர் அறியாத வண்ணமதாய்க்
கைத்தலத்தில் லிங்கமொன்று கன்னியருந் தானெடுத்து
தானே உடன்பிறந்த சகோதரனை யுமழைத்து
மானருந் தென்இலங்கை வந்திறங்கி மங்கையரும்

வந்திங்கே கண்டிநகர் ஆண்டிருந்த மன்னவரும்
விந்தைசெறி மேகவண்ணன் தன்னிடத்தில் மெல்லியரும்
புத்தர் தசனமதைப் பூவையருந் தான்கொடுக்கப்
பத்திரமாய் மன்னன் பரிவுடனே தான்வாங்கி

சித்தம் மகிழ்வாகச் சிறந்துறவு கொண்டாடி
உத்தமியே உந்தனுக்கு உசந்ததைக் கேள் நான் தருவேன்
என்றுமேக வண்ணனுந தானை எடுத்துரைக்க ஏந்திழையும்
நன்று தானை மன்னவனே நானிங் கிருப்பதற்கு

காடு செறிந்த குடி வாழ் வொன்றும் இல்லாத
நாடு திருத்தியிங்கே நலமாகத் தாருமென்றாள்
அப்போது மேகவண்ணன் ஆனகுண சிங்கனுக்கு
செப்பமுடன் மட்டக் களப்புத் திசைதனிலே

இப்போது இம்மங்கை கேட்டபடி போலே
நட்பாகக் காடுவெட்டி நல்லநகர் உண்டுபண்ணி
கொடுஎன்று ஓாசுடிதம் கொற்றவனுந்தான் வரைந்து
கொடுத்தே அனுப்ப அதைக் கொம்பலையாள் தான்வாங்கி

எடுத்துவந்து மட்டுநகர் ஏந்தல்குண சிங்கனிடம்
அடுத்தே அவள்கொடுக்க அரசன் அதைவாங்கி
வாசித்தறிந்து மன்னன் மனம்மகிழ்ந்து அப்போது
யோசித்து ஓர்இடத்தைக் காடுவெட்டியே திருத்தி

திருத்தியே மாளிகையும் செய்துஅந்த எல்லையிலே
இருத்திக் குண சிங்கன் தன் இளைய சகோதரனை
கிரசரன என்பவனைக் கிருபையுடன் அப்போது
அரசாணி முனைபாக அரிவையர்க்கு மன்றல்செய்து

மன்றல்செய்துமே உலகநாச்சி மட்டுமா நகரில்
நன்றாகவே இருந்து நங்கையரும் வாழ்கையிலே
அன்று திடகன்னனும் ஆனபுகழ் வேடுவனும்
சென்று கொக்குநெட்டி மரத்தை யவன்வெட்டிடவே

வெட்டிடவே ரெத்தமதுவெளிக்கிட்டுஓடிடவே
கட்டிவைத்து அம்மரத்தைக் கந்தைத் துணியாலே
ஓடிவந்துமே திடசன் உலகநாச்சி யாரிக்குரைக்க
நாடிவந்து பார்த்திடவே நங்கையர்க்கு லிங்கமது

தானேதெரிகிறதைத் தார்குழலும் கண்டு அப்போ
மானாரும் ஆலயந்தான் மகிழ்வுடனே கட்டிவைத்து
வானவருங் கொண்டாட வையகங்கள் யீடேற
தானாக வந்துதித்த தான்தோன்றும் லிங்கமென்று

பூசையது புரிந்து புகழாய் நடத்தி வர
ஆசையுடன் மட்டுநகர் ஆண்டகுண சிங்கனிட
மைந்தன் அதிகதனை மகிழ்வாய் அரசாள
சிந்தை மகிழ்வாகச் சிறந்த மூடிசூட்டி

இந்தநகர் மட்டக் களப்பை அரசுசெய்து
விந்தையுடன் அதிசுதனும் விண்ணுலகம் போய்ச்சேர
வங்க லாடன் என்னும் வளர்கலிங்க மன்னவனும்
இங்குலகை ஆண்டகதை இனிஉரைப்பேன் அம்மானை

கலிபிறந்து மூவாயிரத்தி எழு நூற்றி
வலியபுகழ் முப்பத் தைந்தாம் வருஷமதில்
வங்கலாட ஞுங்கலிங்க மன்னவனும் இங்குவந்து
சங்கையுடன் இலங்கை தானண்டிருக் கையிலே

அங்கவனும் கொக்குநெட்டி ஆலயத்தைக் கல்லாலே
எங்கும்புகழ் பெருக ஏந்தலுமே கட்டிவைத்து
வைத்தல்லோ தான்சோழ நாடிருந்து மன்னவனும்
சித்திரங்கள் தான்அமைந்த சிறந்தரதம் மூன்றெடுத்து

மூன்றுதர மோட முக்கண்ணீர் வீதியிலே
ஆண்டு தவறாமல் அன்பாய் நடத்திவர
வேண்டுமென்று கட்டளைகள் வேந்தனுந்தான் வகுத்து
மாண்டுபோக முன்னமே தன் மகன்குமார சிங்கனுக்கு

பட்டக்களப் பாழ மன்னவர்கள் போற்றிசெய்ய
பட்டமது கட்டிவைத்துப் பரமபதம் போய்ச்சேர்ந்தான்
பின்பு குமாரசிங்கன் பிரபலமாய்த் தந்தையைப்போல்
அன்பான இக்களப்பை ஆண்டு மடிந்தபின்பு

தன்பாய்க கதிர்சுதனும் நாலாயிரத்தி ஒரு
இன்பமுடன் நூற்றிப் பதினைந்தாம் ஆண்டதிலே
ஆண்டு தனதுமகன் ஆனமதி சுதனை
நீண்ட புகழுடனே நீயிருந்து ஆளுமென்று

ஆளுமென்று சொல்லிஅவன் அரன்பாதம் சேர்ந்தபின்பு
நாளும் சிவாலயங்கள் நற்பணிகள் ஓங்கிவர
ஓங்கிவரச் செல்வம் உலகாண் டிருக்கையிலே
பாங்காகவே முன்னம் பழுதடைந்துமே கிடந்த

ஆலயத்தைச் செப்பனிட்டு அரும்பணிகள் தான்வகுத்து
சாலைகளும் ஐந்துதட்டுத் தூபியுந் தங்கக்குடமும்
மேலே அமைத்துமதில் மூவாறுசுற்றுக் கோபுரமும்
கட்டிமுடித் திருகால பூசை நடத்திவர

திட்டமிட்டுச் சித்திரவே லாயுதனர் கோயிலென்று
போர்முனைநா டென்றுசொல்லிப் பேர்கொடுத்து அந்நகரைக்
ஆர்நிகரும் இல்லாமல் ஆண்டிருக்கும் நாளையிலே
பாரோர் புகழ்ந்திட நற்பாலன் பிறந்திடவே

சீராக நாதன்என்று சிறந்தபேர் தான்கொடுத்து
நாதன்பெயராலே நாடித்திருக் குளந்தான்
நாதனை என்றகுளம் நன்றாகக் கட்டிவைத்து
சித்திரவேல் கோயிலுக்குச் சிறந்த திருப்பணிக்காய்

சுத்தி இருந்தவனச் சோலைகளைத் தான்அளித்து
பத்தியுடன் ஆயிரம் அவணநெல்தான் விதைக்கும்
அத்தனை நெல்வயலும் ஆலயத்திற்கே கொடுத்து
பாலனுக்குத் தன்னுடைய பட்டமதைக் கட்டிவைத்துக்

காலஞ்பதி மதிசுதனுங் கடுகி அடைந்தபின்பு
அடைந்தபின்பு நாதனுமே ஆனமட்டு மாநகரை
படைத்துவை ரோடேதான் பரிவுடனே ஆண்டிருந்து
திடமுடைய மைந்தன் தீரன்தின சிங்கனுக்கு

நடைமுறைகள் குன்றாமல் நாடாழவே கொடுத்து
கொடுத்து உலகுதனை விடுத்தவனுஞ் சென்றபின்பு
அடுத்து மட்டுமாநகரை ஆனதின சிங்கனுமே
கொடுத்தே தமிழரிட ஆலயங்களை அளித்து

எடுத்துப் பொருளெல்லாம் ஏற்றி இந்தியாவிற்கு
இந்தவிதம் ஆலயங்கள் இடிந்தழியுங் காரணத்தை
மந்திரிமார் கண்டு மனுவரதன் மன்னனுக்கு
விந்தையுடன் கடிதம் விரைந்தவர்கள் தான் அனுப்ப

அந்தக் கடிதமதை அரசன் மனுவரதன்
கண்டுசின மடைந்து கடுகிஇரண் டாயிரம்பேர்
கொண்ட படை யதனைக் கொடுத்து மூன்றும் மகனைச்
சென்றுதமிழ் வளரச் செய்துவா என்றனுப்ப

ஆன்று அந்த மாகோனும் ஆனபடை வீரருடன்
வந்து இலங்கைநகர் மணிபுரத்திலே இறங்கி
அந்த நகராண்டிருந்த அரசன்தனை வினவி
சங்கதி களைஅறிந்து சடுதியாய் மாகோனும்

சிங்கமது போலே சினந்து படையுடனே
அங்கவனும் மட்டக் களப்புநகர் தான்மேவி
பங்கப்படச் சிங்கன் பரிவாரம் அத்தனையும்
மங்கிடவே கொண்டு அந்தமன்னன் தினசிங்கனையும்

இங்குஅவன் சந்ததிகள் இல்லாமலே அழித்து
அழித்து இலங்கைஎங்கும் அவனுண்டிருக்கையிலே
செழிக்க மட்டுமாநகரில் சேர்ந்தே சுகதிரனும்
சேர்ந்தே சிலகாலம் செங்கோலது செலுத்தி

சாந்த குண முடனே தானரசி ஆண்டிருந்து
வேந்தன் சமுகதிரன் என்னும் முதல்மகனை
நான்தான் இருந்தரசி ஆண்டநகர ராளுமென்று
அரசுதனைக் கொடுத்து அவனும் மடிந்தபின்பு

தரணிபர்கள் தாண்புகழச் சமுகதிரன் தானும்
நரபதியும் இன்நகரை நாற்பது வருஷமதாய்
மரவுமுறை குன்றாமல் மன்னவனும் ஆண்டிருந்து
பரதசுந்தரன் என்னும் பாலனதனைக் கப்போது

கரமதனில் செங்கோலைக் கொடுத்துலகை ஆளுமென்று
மன்னன் மடிந்தபின்பு மகன்பரத சுந்தரனும்
வண்ணமுடன் இந்த மட்டக் களப்பதனை
அறுபது வருஷமதாய் அவனும் அரசாண்டு

மநுமன்னர் தான்புகழ மகன்ராச சந்திரனை
பொறுமையுடன் இருந்து பூமிதனை ஆளுமென்று
உறுதியுடன் உரைத்து உம்பர்பதி சேர்ந்தபின்பு
தந்தை மடிந்ததின் பின் தான்ராச சந்திரனும்

இந்த நகரமதை இயல்வாய்ப் பதினறு
வருஷமது ஆண்டு வாகாய் அவன்மகனை
அருமையுடன் யாகசேக சேனன் தனையே
உருமையுடன் ஆளுமென்று உயிர்பிரிந்தான் மன்னவனும்

பெருமையுடன் யாகசேக சேனன் தானும்
ஐம்பது வருஷமது அவனும் அரசாண்டிருந்து
தன் புதல்வனான தனயன் குச சந்திரனை
உம்பர்களுந் தான்புகழ உலகை அரசாளுமென்று

எம்பிரான் பாதமது ஏந்தலுமே போய்ச்சேர
பத்து வருஷமது பரிவாய்க் குச சந்திரனும்
இத்தரையைத் தானாண்டு இவனும் மடிந்தபின்பு
மங்களமாய் இந்த மட்டக் களப்பதனை

வங்கரொடு சிங்கர்படை யாட்சியுங் கலிங்கர்
இவைதனை நான்கு பங்காகவே பிரித்து
தங்கள் உரிமையென்று தானே அரசாண்டு
எழுபது வருஷமது எல்லோரும் ஒன்றாக

பழுதுகள் இல்லாமல் பாருலகை ஆண்டிருக்க
சிங்கன் குலத்தவர்கள் சீறியே மேலெழுந்து
மங்களமாய் மற்றக் குலத்தவரைத் தான் அடக்கி
அடக்கியவர் முப்பத் தெட்டு வருஷமதாய்

மடக்கிஇந்த மட்டக் களப்பாண் டிருக்கையிலே
மாருதசேனன் என்னும் மன்னன் கலிங்கனுமே
பாரோர் புகழ்ந்திடவே பலபேரையும் சேர்த்து
ஆரும்நிக ரில்லாமல் அரசாண்டு தானிருந்து

ரோகத் தன்மகனும் சிறந்தஎதிர் மன்னசிங்கன்
எதிர்மன்ன சிங்கனுமே எல்லை அர சாளுதற்கு
சதிராய் முடிசூட்டித் தானும் இருக்கையிலே
இருக்கையிலே போர்த்துக் கீசர் இலங்கையிலே

பெருக்கெடுத்து வந்து பிடித்த இடங்களுமினி
மணற்றிடர் மன்னாறு என்னும் இடங்களையே
தனக்கென்று மேபிடித்துத் தானே அவர் இருக்க
இருக்க எதிர் மன்னசிங்கன் அரசாளுகையில்

விருப்பமுடன் நாதனிட விபரங்கே ளம்மானே:

## விருத்தம்

எதிர்மன்ன சிங்கன்தானே ஏவலர் பணிந்துபோற்ற
விதிமுறை யாகச்செங்கோல் விளங்கிட ஆளும்நாளில்
மதியினில் மிகுந்தநாதன் என்றொரு வணிகன்தானே
பதிபுகழ் இலங்கைவந்த பரிவதைக் கூறுவேனே:

# அம்மானை

நாலா யிரத்தி அறுநூற்றி நாற்பதிலே
வாலமதன் போலேவந்து எதிர்மன்ன சிங்கன்
வந்துஎதிர் மன்னசிங்கன் மட்டுநகர் ஆழ்கையிலே
விந்தையுடன் நாதனிட விபரங்கேள் அம்மானை.

வடநாடு கோங்குநகர் வாழ்ந்திருந்த நாதனுமே
திடமாய்க் கடல்கடந்து திருக்கோயில் என்னுகின்ற
இடமதனில் வந்துஅவன் இருக்கும் விதமதனை
உடனே எதிர்மன்ன சிங்கனுமே தானறிந்து

ஆரென்று வந்தமன்னன் அவனை வினவிடவே
சீராக நாதனுமே செப்புவான் அப்பொழுது
கோங்குநகர் வசியகுலம் நாதன் என்பெயரும்
பாங்கான ஐவருக்கும் பாவி துரியோதனர்க்கும்

தீங்குநடந்து சண்டை செய்தழிந்த காரணத்தை
இங்கேநான் உங்களுக்கு இயல்வாய் அறிவிக்கஎன்று
வந்தேன் ஒருஇடமும் வனமுங் கடலருகாய்
தந்திடுவீர் உங்களுக்குத் தானேஅதைக் காட்டிடுவேன்

அந்தஇடங் காட்டுமென்று ஆன கடலருகாய்
வந்திடவே ஆல்விருட்சம் வனமுங் கடலிருக்க
இந்தஇடம் நல்லதென்று இன்பமுடன் நாதனுமே
சந்தோஷமாய் அவர்க்குத் தருமர்வனம் போனதுவும்

அருச்சுனன் பாசுபதம் அதுவாங்கப் போனதுவும்
நெருப்பதனில் பாஞ்சாலி தானிறங்கி வந்ததுவும்
வந்தமுறை யாவும் வரல்முறையாய்த் தான்காட்டி
அந்தஇடம் பாண்டிருப்பு என்றுபேர் தானுமிட்டு

சந்தோஷ மாகஅவன் தன்நகரம் போனபின்பு
சிந்தை மகிழ்ந்துஎதிர் மன்னசிங்கன் அப்போது
நாற்பத்தி நான்கு வருஷமதாய் இன்னகரை
காப்பாற்றி ஆண்டுமன்னன் காலம்முடிந்த பின்பு

மத்திய தேசமதை ஆண்டராச சிங்கனுமே
இத்தரையைச் சேத்தவனும் இருந்து அரசாழ்கையிலே
நாலா யிரத்தி அறுநூற்றி எண்பதிலே
காலனைப்போல்ப் போர்த்துக்கீசர் இந்த மட்டுநகர்

கோலமுடன் வந்திறங்கிக் கொடுமை பலபுரிந்து
நாலா யிரத்தி எழுநூற்றி இருபத்தி
இரண்டாம் வருஷமதில் இயல்வாகக் கோட்டைகட்டி
முரண்டுத் தனமாகத் தமிழ்மொழியை மாற்றிவருகிறதை

மட்டக்களப்பில் உள்ள
ஏற்ற தளபதிகள் எல்லோரு மாய்க்கூடி
கூடியே கண்டிநகர் ஆழ்விமல தர்மனிடம்
நாடியவர் சென்றுஅங்கே நடந்த விபரமெல்லாம்

சொல்ல அதைக்கேட்டுத் தானே விமலதர்மன்
வல்லவனும் ஓர்கடிதம் வரைந்து கொடுத்தனுப்பி
மலாயாநகர் வீரர்களை மன்னவனும் இங்கழைத்து
கலகமிட்டுச் சண்டைசெய்து கடியபோர்த்துக்கீசரையே

மட்டக் களப்பைவிட்டு மன்னர்போர்த்துக்கீசரையே
திட்டமுடன் விலக்கித் தீரனுமே காவல்வைத்து
வைத்துஇவர் இருக்க வளமைசெறி யாழ்ப்பாணம்
ஒத்துக்குடா என்னும் ஊர்தனிலே தான்இருந்து

அந்தநகர் தன்னைவிட்டு அன்புடனே மட்டுநகர்
கந்தப்பர் வந்தகதை கனறுகின்றேன் கேளும்இனி.

## விருத்தம்

இலங்கைநகரில் புகழ்மிகுந்து இனியதமிழின் கலைபரந்து
தலங்கள் எங்குமேசிறந்து தானேபுகழும் யாழ்ப்பாணம்
நலங்கொள் ஒத்துக்குடா இருந்துநாடார் நம்பிமகளுடனே
கலங்கிமனது மட்டுநகர் கந்தர்வந்த கதைகேளே.

## அம்மானை

மன்றொரும் யாழ்ப்பாணம் மங்கித்தமிழ் குறைந்து
அன்னுளிலே கிறிஸ்து வேதம் அதிகரித்து
அதிகரித்து வாறவிதம் அறிந்துகந்தர் என்பவரும்
பதியாய் இருந்தஒத்துக் குடாநகரம் விட்டுஅவர்

கன்னிகை அம்மனிட விக்கிரகம் ஏழுடனே
நுண்ணயமாய் ஏழு நாடார்குடும்ப முடன்
உடனபிறந்த தங்கையர்கள் இருவருடன் நன்மகளும்
திடமுடனே தான்நம்பிக் குடும்பமுடன் ஓவியரும்

படகுதனி லேறிப் பரிவாய்க் கடல்கடந்து
கடல்கடந்து மட்டுநகர் கந்தருமே வந்திறங்கி
வந்திறங்கி மண்முனையில் வலிப கலிங்கனுடன்
சந்தோஷமாய் அவருந் தான்உறவு கொண்டாடி

கொண்டாடி மண்முனைக்கு அருகாக ஓர்சிற்றூர்
உண்டாக்கிக் கொண்டுவந்த விக்கிரகம் ஏழையுமே
வைத்துப் புதுக்குடியிருப்பு என்றதற்குப் பேருமிட்டு
சித்தம் மகிழ்வாகச் சிறந்தங் கிருக்கையிலே

திக்கரன் என்றுரைக்கும் தீரன்படை யாட்சியவன்
தக்கபுகழ் கந்தரையும் தங்கை இருவரையும்
ஆறுதனில்த் தாட்டு அவர்கள் தனைமடித்து
மாறுசெய்து கந்தப்பர் மகள்சங்கு முத்தையுமே

கலிங்ககுல வில்லவனுக் கேஅவளை மன்றல்செய்து
சலியாமல்க் கண்ணகியாள் சிலைஏழு தன்னையுமே
மட்டக்களப் பேழுகிராமங்களில் இருத்தி
இட்டமுட னவர்கள் இருந்தரசி ஆழ்நாளில்

ஆழ்நாளிலே போத்துக்கீசர் அகன்றபின்பு
வாழ்ந்திடவே ஒல்லாந்தர் வர்த்தகமாய் இங்குவந்து
சேந்துமட்டு மாநகரைச் சிலநாள் அரசுசெய்து
வேந்தன் கலிங்கன்என்னும் மேன்மையுறு முற்தலத்தோர்

தங்களுக்கே நிலமை தானெற பட்டமுடன்
மங்கள மாகஇந்த மட்டுநகராழ் கையிலே
பண்ணைநகர் இருந்து பஸ்கோல் முதலிதன்னை
நண்ணையமாய் ஒல்லாந்தர் நாடியே இங்கழைத்து

நாலாயிரத் தெண்ணூற்றி ஐந்தாம் வருஷமதில்
மேலாய் இருந்தவரைக் கீழாக வேஇருத்தி
கள்ளக் கடிதமது கண்டி அரசனிடம்
குள்ளன் பசுக்கோல் முதலி கொடுத்துமவன்

நிலமை இருவரையும் நிதியதிபர் எண்பதுபேர்
நலமாய் இருந்தவரைக் கொலைசெய்து கண்டியிலே
பலகொடுமை தான்புரிந்து பசுக்கோல் முதலியவன்
விலகியவனை இன்நகரை விட்டுப் பிரிந்தபின்பு

நாலாயிரத் தெண்ணூற்றிப் பதினேந்தாம் வருஷமதில்
கோலமுடன் ஒல்லாந்தர் கொடுத்து ஆங்கிலேயருக்கு
கொடுத்து மட்டுமாநகரை விடுத்தவனும் சென்றபின்பு
அடுத்துஇங்கே ஆங்கிலேயர் ஆண்டு சிலநாளாக

விடுத்தார் ஐயாயிரத்தி நாற்பத்தி எட்டதிலே
எடுத்தே லங்கையனிட மூலத்திலே உள்ளவர்கள்
வையகத்தை ஆண்டுஇப்போ வாழுர் கலிபிறந்து
ஐயாயிரத்தி எண்பத் தொரு வருஷம்

மெய்யாய் நடக்கிறது மேதினியில் உள்ளபடி
சைவந் தழைத்தோங்கும் தரணியது மட்டுநகர்
மட்டுநகர் மாமாங்கம் மண்டூர் சிற்றாண்டியதும்
திட்டமுடன் கொக்கட்டிச் சோலைதிருக் கோயிலதும்

உகந்தமலை போர்முனையூர் சித்திரவேல் ஆலயமும்
அகமகிழ்வாய் முன்னோர்கள் அமைத்த இடங்களிது
இடங்கள்தலம் எத்தனையோ இன்னமஉண்டு இன்நகரில்
அடங்காது நானறிந்த வரைக்கும் அம்மானையதாய்

பாடினேன் என்னுடைய பாடலிலே எத்தனையோ
கோடிகுறைகள் இருந்தாலுங் கொற்றவரே
இருந்தாலுமே பொறுத்து இனிமேல் வரும்இளைஞர்
திருந்தப் படித்துஎங்கள் செந்தமிழர் ஓங்கிவர

கல்வியதை மறைத்து வைக்காமல் கற்றவரே
நல்லமுறை யாகநம் மிளைஞர் முன்னேற
வல்லதமிழ் வளர வையுங்கள் கற்றவரே
பொல்லாமழை பொழிந்து நல்லமழை பெய்துலகில்

உலகந் தழைத்தோங்க உன்னடியார் ஈடேற
நலமான கொக்கட்டிச் சோலைதனி லமர்ந்த
தாந்தோன்றும் அப்பாஉன் தாழிணைகள் தஞ்சமதாய்
நான்தான் உனதுஅருள் அறியாதான் பாடுகின்றேன்

பாடும்பொருளும் பயனும்உனை அல்லாது
வாடுந் தமிழருக்காய் வந்தருளும் ஈசுபரனே
கன்னன்குடா நகரைக் காத்தரசி ஆளவந்த
அன்னையரே கண்ணகிஎன் அம்மா உனைப்பணிந்தேன்

என்னுடைய தாய்தந்தை இணையடிகள் தாள்பணிந்து
மன்னவர்கள் தான்புகழ மகிழ்வாக மட்டுநகர்
தன்னித் தமிழ்வளரக் காசினியில் வாழியதே.

சுபம்.

இயற்றியவர்:— **மா. சிதம்பரப்பிள்ளை**

**கன்னன்குடா, மட்டக்களப்பு.**